விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 14 செவ்வாய்க்கிழமை (31.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 307

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## எரிபொருட்கள் இன்மையால்

# அத்தியாவசிய சேவைகள் செயலிழக்கும் அபாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருட் தட்டுப்பாட்டினால் அத்தியாவசிய சேவைக. ளான மின்சாரம், தொலைபேசி, போக்குவரத்து என்பன முற்றாகச் செயலிழக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 11 ஆம் திகதி தடைப்பட்ட இச் சேவைகள் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் எரி பொருட் தட்டுப்பாட்டினால் மீண்டும் செயலி ழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஓரிரு தினங்களில் டீசல் மற்றும் பெற் றோல் என்பன யாழ்ப்பாணத்திற்கு வந்து சேரவில்லை எனின் அனைத்துச் செயற் பாடுகளும் முற்றாகச் செயலிழக்கும் என சம் பந்தப்பட்ட தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**போக்குவரத்து**

டீசல் பற்றாக்குறையின் காரணமாக வட பிராந்தியப போக்குவரத்துச் சபையின் சேவை கள் நேற்று மட்டுப்படுத்தப்பட்டன. தொடர்ச் சியாக போக்குவரத்துச் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்குழுவினர் இன்று திரும்புவர்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சில் கலந்து கொள்ளச் சென்ற அரச –விடுதலைப்புலிகளின் பிரதி நிதிகள் இன்று நாடு திரும்புகின்றனர்.

அரச தரப்புப் பிரதிநிதிகள் இன்று அதி காலை நாடுதிரும்புவார்கள் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் இன்று அதிகாலை ஜெனீ வாவி லிருந்து புறப்படுவர் என தெரிவிக்கப்பட்டது.

முன்னர் திட்டமிட்டபடி விடுதலைப்புலிக ளின் பிரதிநிதிகள் நோர்வேக்கு செல்லமாட் டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் கொழும்பை வந்தடைந்ததும் உடனடியாக கிளிநொச்சிநோக்கிப் புறப்படுவார்கள் என வும் தெரிவிக்கப்பட்டது. (ச)

# அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை

# ஜெனீவாவில் நிருபணமாகியுள்ளது

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(ஜெனீவா)

தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அரசாங்கம் ஒத்துழைக்கும் என்று சிறு அளவில் கூட நம்பிக்கையில்லாமல்தான் வந்தோம். ஜெனீவாவில் அது நிருபணமாகியிருக்கிறது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஜெனீவாவில் தெரிவித்துள் ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேசசபை உறுப்பினர் நேற்று சுட்டுக்கொலை

(திருகோணமலை)

தமிழரசுக் கட்சியின் திருகோணமலை சேருநுவர பிரதேச சபை உறுப்பினர் கோ. பத்மகலாபன் (வயது 26) இனந்தெரியா தோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பட்டதாரியான இவர் வங்கி ஒன்றிற்குச் சென்று கொண்டிருந்தபோது பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் வைத்துச் சுட் டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. (ச–5)

## நல்லூர் பின்வீதியில் வைத்து குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் பின் வீதியில் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2மணிக்கு மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் தனது மகனை ஏற்றிக்கொள்வதற் காக வந்தபோதே சுட்டுக்கொல்லப்பட்டாரென தெரிவிக்கப்பட்டது.

எனினும் மரண விசாரணைகள் நடை பெறாமையினால் மேலதிக தகவல்களைப் பெற முடியவில்லை. (ச–5)

## பூநகரியில் தஞ்சமடைந்திருந்த 46 மீனவர்கள் யாழ்.வந்தனர்

## விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு

# பூநகரியில் தஞ்சமடைந்திருந்த 46 மீனவர்கள் யாழ்.வந்தனர்

(யாழ்ப்பாணம்)

பூநகரியில் தங்கியிருந்த யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த மீனவர்கள் 46 பேர் நேற்று குடாக்கடலினூடாக குருநகரை வந்தடைந்தனர். இவர்கள் சுமார் 15 படகுகளில் வெள்ளைக்கொடிகளைப் பறக்கவிட்டவாறு குருநகரை வந்தடைந்ததாக தெரிவிக் கப்பட்டது. கடந்த ஆகஸ்ட் 11 ஆம் திகதி மண்டை தீவிலிருந்து பூநகரிக்கடலில் மீன்பிடிக் கச் சென்றிருந்தபோது அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையில் போர் மூண்டதால் கரைதிரும்ப முடியவில்லை.

இதனையடுத்து அவர்கள் விடுதலைப் புலிகளின் பகுதியான பூநகரியில் தஞ்சம டைந்திருந்தனர். இந் நிலையில் நேற்று அவர்கள் குடாக்கடலின் ஊடாக யாழ்.நோக்கி வந்தனர்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு விரைவில் அரசாங்கம் பதில் வழங்கும்

## அமைச்சர் ரோஹித போகொல்லாகம

(கொழும்பு)

ஏ-9வீதி திறப்புத்தொடர்பான விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு விரைவில் அர சாங்கம் பதிலை வழங்கும். ஏ-9வீதி தொடர்பான தற்காலிக பிரச்சினையை புலிகள் குழப்பி விட்டனர் என்று அரசாங்க பேச்சுவார்த்தைக் குழுவின் உறுப்பினரும் அமைச்சருமான ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

ஜெனீவாப் பேச்சுக்கள் தோல்வியடைந் தமை குறித்துக் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறிய (04 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் ஜனவரியில் நடைபெறும்!

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நம்பிக்கை

(ஜெனீவா)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடை யிலான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் எதிர் வரும் ஜனவரி மாதம் நடைபெறக்கூடும் என அமைச்சரும் அரச பேச்சுக்குழுவின் தலை வருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித் துள்ளார்.

லண்டன் பி.பி.ஸிக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கான அத்தியாவசியப் பொருட்களை கப்பல் மூலம் கொண்டு செல்வதற்கு விடுதலைப்புலிகள் பாதுகாப்பு வழங்க வேண்டுமென அரச பேச் சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாங்கள் இரண்டு விடயங்கள் குறித்து முக்கியமாக விவாதித்தோம். ஒன்று மனிதா பிமான விடயங்கள் சம்பந்தப்பட்டது. மற்றை யது அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வு குறித்தது. யாழ்ப்பாணப் (04 ஆம்பக்கம்பார்க்க)

# நடைபாதை வியாபாரி நகரில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நடைபாதை வியாபாரி ஒரு வர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு யாழ்.போதனாவைத்தியசாலை வீதியில் கந்தப்பு செட்டியார் ஒழுங்கையில் நடைபெற்றது.

சம்பவத்தில் கைதடி வடக்கைச் சேர்ந்த நவரட்ணம் மகிந்தன் (04 ஆம்பக்கம்பார்க்க)

உள்ளே...
குருப்பெயர்ச்சி
(12 ராசிகளுக்குமான பலன்கள்
உங்கள் வலம்புரியில் தொடர்ந்து வரும்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தென்மராட்சிப் பரீட்சை நிலையங்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாக அறிவிப்பு

யாழ்.குடாநாட்டில் எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறவுள்ள தென்மராட்சிப் பரீட்சை நிலையங்கள் சில இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

வரணி, உசன், கொடிகாமம் ஆகிய இடங்களிலுள்ள பரீட்சை நிலையங்களே மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

வரணி மகாவித்தியாலய பரீட்சை நிலையம் மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் மற்றும் கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளிலும் நடைபெறவிருந்த பரீட்சை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ச-133)

# யாழ்.சைவ விவகாரக் குழுவின் முன்னாள் தலைவர்கள் கௌரவிப்பு

சைவ சமய விவகாரக் குழுவின் தலைவர்களாகக் கடமையாற்றியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.மாநகர சபை ஆணையாளரும் குழுவின் தற்போதைய தலைவருமான மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் முன்னைய காலங்களில் யாழ்.மாநகர சபையின் ஆணையாளராக கடமையாற்றி இளைப்பாறிய சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் கலாநிதி க.குணராசா ஆகியோருக்கு ஆணையாளர் மு.செ.சரவணபவ பொன்னாடை போர்த்தி, நினைவுக் கேடயம் வழங்கி கௌரவித்தார்.

இந் நிகழ்வில் சைவ சமயவிவகாரக் குழுவன் அங்கத்தவர்களும் நலன்விரும்பிகளும் கலந்து கொண்டனர். (ச-133)

# பற்சிகிச்சை பிரிவு ஆரம்பம்

கரவெட்டி மத்திய மருந்தகம், மகப்பேற்று மருத்துவ மனையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் காலையில் பற்சிகிச்சைப் பிரிவு இயங்கிறது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து பல் வைத்திய நிபுணரால் இப் பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவு நடத்தப்படுகின்றது என பிரதேச மக்களுக்கு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# மொறட்டுவ கம்பஸ் மூடப்பட்டுள்ளது

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே நேற்று மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பொறியியல்பீட மாணவர்களுக்கும் தேசிய தொழில்நுட்ப மாணவர்களுக்கும் இடையே இம்மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இம்மோதலையடுத்து மொறட்டுவப் பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (கு)

# சமாதானப் பேச்சுவார்த்தையில் தம்மை சேர்க்காதது குறித்து கருணா வருத்தம்

## லக்பிம செய்தி வெளியீடு

அரசுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு கருணா குழுவினை இணைத்துக் கொள்ளாது இறுதி முடிவினை எடுக்க முடியாது என கருணா தெரிவித்துள்ளதாக அக்குழுவின் தகவல் நிலையம் தெரிவித்துள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச சமூகம் கிழக்கே வாழ் மக்கள் தொடர்பாக மறந்தே இவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தமது குழுவினை சேர்த்துக் கொள்ளவில்லை என கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

யாதாயினும் புலிகளுக்கு எதிராக தாக்குதலை மேற்கொள்ள தமது உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி வருவதாக மட்டக்களப்பின் கருணா குழுவின் அரசியல் தலைவர் பிரதீப் மாஸ்டர் தெரிவித்துள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# ஓய்வூதியம் கொடுப்பனவு

(ஊர்காவற்றுறை)

சகல அரச ஓய்வூதியர்களுக்கான நவம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளது.

வேலணையிலுள்ள ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளையில் ஓய்வூதியர் கொடுப்பனவை பெறுவார்கள். அன்றைய தினம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உள்ள இலங்கை வங்கியில் எடுக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-72)

# சத்துருகொண்டானில் இருவர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு வெளியே சத்துருக்கொண்டானில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கைகள் கட்டப்பட்ட நிலையில் இரண்டு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இருவரும் ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டு நேற்று முன்தினமிரவு அல்லது நேற்று அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இருவரும் 26 வயதுடைய தன்னாமுனையைச் சேர்ந்த கிறிஸ்தோபர் கிறிஸ்ரி மற்றும் செங்கலடியைச் சேர்ந்த அலோசியஸ் அனுராஜ் என மட்டக்களப்பு பதில் நீதிபதி எம்.ஐ.என்.நூர்ஸன் முன்னிலையில் உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (கு)

# சம்பள முற்பணம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதிப் பாடசாலைகளில் கடமையாற்றும், குடாநாட்டில் தற்பொழுது தங்கியுள்ள ஆசிரியர்களுக்கான ஒக்டோபர் மாத சம்பள முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம் முற்பணம் ஓரிரு தினங்களுக்குள் வழங்கப்படும் என யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (ச-133)



# கும்பம்

(அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3)

# குருப் பெயர்ச்சி

*எவ்வளவு கஷ்டம் வந்தாலும் மனோதிடம் குறையாத கும்ப ராசி அன்பர்களே!*

உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்திலிருந்த குரு பகவான் இப்போது 10 ஆம் இடமான விருச்சிக ராசியில் பெயர்ச்சியாகியுள்ளார்.

ராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களை தன் 5,7,9-ம்பார்வையால் பார்க்கிறார். இதனால் கண்களில் குளிர்ச்சியும் பேசும் வார்த்தையில் சாந்தமும் தவழும், குடும்பத்தில் உங்கள் நடவடிக்கையை அனைவரும் வரவேற்பர்.

உங்கள் முன் நடக்கும் சம்பவங்களைக் கவனித்து தேவையற்றதை விலக்கிவிடுவீர்கள். சகோதரர்களிடம் பட்டும் படாமலும் அன்பு காட்டுவீர்கள். வீடு, மனை , வாகன வகையில் விரும்பிய நல்ல மாற்றங்களை திருப்திகரமாக செயற்படுத்த வழிபிறக்கும்.

தாயின் உடல்நலம் ஆரோக்கியமாகவிருக்கும். தாய் வழி உறவினர்கள் மிகுந்த பாசத்துடனும் பண்புடனும் நடந்து கொள்வார்கள். புத்திரர்களின் செயற்பாடுகளை தகுந்த முறையில் கவனித்து வழிநடத்துவதால் இனி மையான நற்பலன் ஏற்படும்.

பூர்வ சொத்துத் தொடர்பான பராமரிப்பு மற்றும் ஆவணங்களை தகுந்த பாதுகாப்புடன் கையாள்வது சிறப்பாகும். குலதெய்வ வழிபாடு மேற்கொள்வதால் நடப்பவை நல்லவையாகும். கடன், வழக்குப் போன்ற விவகாரங்களில் அனுகூலமான நற்பலன்கள் உருவாகும். ஆரோக்கிய நல வாழ்வு படிப்படியாக நல்மாற்றம் பெறும்.

கணவன், மனைவி ஒற்றுமை சிறக்க தம்பதியர் விட்டுக் கொடுத்து நடப்பதால் நன்மையுண்டு. நண்பர்களுடன் ஆன்மீக சுற்றுலாப் பயணம் சென்று வரும் இனிய அனுபவம் கிடைக்கும்.

தந்தை வழி உறவினர்கள் உங்கள் பொருளாதார வரவை உயர்த்திட உதவிபுரிவார்கள். சுக சவுகரிய வாழ்க்கை வசதி திருப்திகரமாகவிருக்கும். தொழில் சார்ந்த வகையில் கூடுதல் கவனத்துடன் செயற்பட்டால் எதிர்பார்த்த நன்மை தானாக வரும்.

பணச்சேமிப்பு உருவாக்குவதற்கான வசதி அதிகரிக்கும். வெளியூர் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புடைய வேலைவாய்ப்பு, வியாபாரம் போன்றவற்றில் கிடைக்கும் நம்பகத் தன்மைக்கு ஏற்ப செயற்படுவது நன்மை தரும்.

### *குரு வக்ர காலப் பலன்*

*05.04.07 முதல் 27.08.07 வரை*

ராசிநாதன் சனிக்கு சமகிரகமான குரு பகவான் வக்ரம் பெறுகிறார். இதனால் பண வரவு நிதானமாகவிருக்கும். பணியிலும் கௌரவமான பதவியிலும் பலவிததுன்பங்கள் வரலாம். தைரியத்துடனும் நேர்மையுடனும் செயற்படுவதால் துன்பம் விலகி நன்மை பெறலாம்.

உடல் நலத்தில் கவனம் வேண்டும். எதிரிகளின் தந்திரங்களை முறியடிக்க நண்பர்கள், உறவினர்களால் உதவி கிடைக்கும். கண்ணின் உஷ்ணம் சம்பந்தமான பிணிகள் வரும். தகுந்த மருத்துவச் சிகிச்சை குணம் தரும்.

வீடு, மனை சார்ந்த வகையில் வீண்வம்பு விவகாரம்மாறி மனதிற்கினிய நற்பலன் உண்டாகும். மனைவியின் உடல்நலத்திலும் செயற்பலத்திலும் நிதானம் வேண்டும். திடீர் தன பிராப்தி ஏற்படும்.

### *தொழில் அதிபர்கள்*

மருத்துவமனை, கல்லூரி நடத்துவோர், அடுக்குமாடி குடியிருப்புக்கள் கட்டுவோர், கடற்கரை, மலை வாசஸ்தல ரிசார்ட் நடத்துபவர்கள், தார்சாலை அமைக்கும் ஒப்பந்தக்காரர், பழப்பண்ணை , பழச்சாறு , ஜாம் வகை , பட்டுநூல் தயாரிப்பு, உணவு தானியம், சணல் பொருள் உற்பத்தியாளர்கள் தங்கள் தொழிலில் கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டும்.

பொதுவாக அனைத்தும்தொழில் அதிபர்களுக்குமே போட்டி, பொறாமையை எதிர்கொள்ள வேண்டியசூழல் ஏற்படும். ஆனாலும் தொழில் வளர்ச்சிக்கும் கூடுதல் பண வரவுக்கும் பங்கம் வராது.

புதிய கிளைகள் துவங்கும் முயற்சியில் கூடுதல் பரிசீலினை அவசியமாகும். வெளியூர் வியாபாரத்தொடர்பிலும் பொருள் பாதுகாப்பிலும் கூடுதல் கவனம் தேவை.

### *பணியாளர்கள்*

அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணி புரிபவர்கள் முன்யோசனையுடன் செயற்பட்டால்தான் பணி இலக்கை சரியாகப் பூர்த்தி செய்ய முடியும். சக பணியாளர்களின் குணமறிந்து அதற்கேற்ப நடந்து கொள்வது நல்லது.

கட்டடக் கட்டுமானம், மருத்துவமனை, உணவுப் பொருள் தயாரிப்பு ஆகிய பணியில் உள்ளவர்கள் உரிய கவனத்துடன் செயற்படுவதால் மட்டுமே பொருள்இழப்பு வராமல் தவிர்க்க முடியும்.

காவல்துறை, இராணுவம் போன்றவற்றில் பணிபுரிபவர்கள் பணியைக்கண்ணாகக்கருதினால் மட்டுமே குறையோதும் வராத நிலை பெறமுடியும்.

பொதுவில் பணியாளர்களுக்கு சிரமமான காலகட்டந்தான். சிலருக்கு விருப்பத்திற்கு மாறான பணியிட மாற்றம் கிடைக்கலாம். வருமானத்திலும் பெரிதாக ஏதும் எதிர்பார்க்க முடியாது. உண்மையாக உழைப்பதால் எதிர்காலத் தில் பலன் கிடைக்கும்.

### *வியாபாரிகள்*

தானியங்கள், மாவு, பேக்கரி, பூச்செடிகள், தொட்டிகள், மருந்து, கட்டுமானப் பொருள்கள், பழவகைகள், குளிர்பானங்கள், இறப்பர் பொருள்கள், பர்னிச்சர், கடல் சார்ந்த பொருள்கள், உரம், தென்னை சார்ந்த பொருள்கள் விற்பவர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

வாடிக்கையாளர்களை அனுசரித்து செயற்படுவதால் மட்டுமே வியாபாரத்தை உயர்த்த முடியும். மற்ற வியாபாரிகளுக்கும் சுமாரான காலகட்டம்தான்.

### *மாணவர்கள்*

ஆசிரியப் பயிற்சி, மருத்துவம், தகவல் தொழில் நுட்பம், விவசாயம், சமையல் கலை , காவல்துறை ,தீயணைப்புத்துறை , இராணுவம், நிதி மேலாண்மை , பங்குச்சந்தை வர்த்தகம், அரச நிர்வாகம், வங்கியியல், தணிக்கையியல், கொதிகலன் இயக்குதல், வார்ப்பட பணிகளுக்கான பயிற்சி, டர்னிங், வெல்டிங் பயிற்சி பெறும் மாணவர்கள் சிறப்பான தரத் தேர்ச்சியும் விரும்பிய வேலை வாய்ப்பும் பெறுவார்கள்.

படிப்புக்கு தேவையான பண வசதி சரளமாகக் கிடைக்கும். சக மாணவர்கள் ஒற்றுமை உணர்வுடன் நடப்பர். விளையாட்டுக்களில் கவனம் வேண்டும். தந்தை, மகன் உறவு நிலை பற்றுப்பாசத்துடன் இருக்கும். சுற்றுலாப்பயணங்களின் போது உயரமான இடங்களில் கவனம் வேண்டும்.

### *பெண்கள்*

அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் பணியில் கவனம் செலுத்தாவிட்டால் இடஞ்சல் ஏற்படும். சக பணியாளர்கள் தகுந்த மரியாதையுடன் நடந்து கொள்வர்.

குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் வீட்டின் முக்கிய தேவைகளை பட்டியலிட்டு செயற்படுத்தி குடும்ப உறுப்பினர்களின் நல்ல அன்பைப் பெறுவர். பண வசதி தாராளமாகக் கிடைக்கும். புத்திரர்களைப் பராமரிப்பதில் கஷ்டம் ஏற்படலாம் என்பதால் ஸ்தல வழிபாடு செய்யுங்கள். சுயதொழில், கூட்டுத் தொழில் புரியும் பெண்கள் அளவான மூலதனம் இட்டால் போதும்.

சக தொழில் சார்ந்தவர் நல்லெண்ண அடிப்படையில் தொழில் வளர்ச்சிக்காக ஆலோசனை மற்றும்உதவி தருவர். இளமைக்கால சினேகிதியின் உதவி கிடைக்கும்.

### *அரசியல்வாதிகள்*

உங்கள் நற்பெயரைப்பாதுகாக்கும் வகையில் செயற்படுவதால் மட்டுமே நன்மையுண்டு. பண வரவு பெறுவதற்கான பல வழி

**ஜோதிட மாமணி சங்கர்ஜி**

கள் பிறக்கும். ஆதரவாளர் எண்ணிக்கை அதிகரிக்கும். நீங்கள் சொல்வதை பிறர் ஆர்வமுடன் மதித்து நடப்பார்கள்.

அரசியலில் வாரிசுகளை ஈடுபடுத்த விரும்புபவர்கள் முயற்சியை ஒத்திவையுங்கள். எதிர்வரும் காலத்தில் பார்த்துக் கொள்ளலாம். அரசியலுடன் தொழில் நடத்தும் வாய்ப்புப் பெற்றவர்கள் சிரமங்களைச் சந்திக்கலாம். வெளியூர்ப் பிரயாணங்களில்பணப் பாது காப்பை உறுதி செய்து கொள்ளுங்கள்.

### *விவசாயிகள்*

தக்காளி, மிளகாய், கரட், வெங்காயம், பீற்றூட், நூக்கல், உருளைக்கிழங்கு, எண்ணெய் வித்து, திராட்சை , தேயிலை, வெற்றிலை, றப்பர் விவசாயிகள் அறுவடைக் காலங்களில் பயிர்ப் பாதுகாப்பில் கூடுதல் கவனத்துடன் நடப்பதால் பயிர் வரவு,பண வரவு அதிகரிக்கும்.

கால்நடைகள் அபிவிருத்தியுண்டு. நில சம்பந்தமான விவகாரங்களில் அனுகூல வெற்றி உண்டாகும்.

### *பரிகாரம்*

விநாயகருக்கு அறுகம்புல் மாலை சார்த்தி வழிபட தொழில் வகையில் இடர்வராத நன்னிலை ஏற்படும்.

(தொடரும்)

ரு மனிதனின் உண்மையான தன்மையை
வேண்டுமானால் அவன் கையில் அதிகாரத்
கொடுத்துப் பார்க்க வேண்டும்.
-இங்கர்சால்

வலம்புரி

## ...ப்பாட்டை நீக்க ...சமூகம் முன்வர வேண்டும்

...ல் அரசுக்கு விடுதலைப்புலிகளுக்கும்
...சாதானப் பேச்சுவார்த்தை
...ளது.
...தையில் ஏ-9பாதையைத்
...படும் என மக்கள் நம்பி

...லும் அந்த நம்பிக்கை வீண் போய்விட்டது.
...தையைத் திறப்பது மனிதாபிமான நடவடிக்கை
அரசதரப்பிற்கு எடுத்துக் கூறியும் அதுவிடயத்
...பாதிய கவனம் எடுக்கப்படவில்லை.

...னீவாப் பேச்சுவார்த்தையில் ஏ-9பாதை திறக்
...ம்: உணவுப்பொருள்கள் தட்டுப்பாடின்றி எடு
...வரப்படும் என்ற எதிர்பார்ப்புக்கள் வீண்போன
...நேரம் யாழ்.குடாநாட்டில் பட்டினித் தாண்டவம்
...லவிரித்தாடுகின்றது.

...பாடசாலைகளில் மாணவர்கள் மயங்கி விழு
...றனர். சிறுவர்கள் போசாக்கான உணவின்றி
...துபோயுள்ளனர்.

இந்தப் பரிதாப நிலை நாளுக்கு நாள் அதிகரித்து
...கின்றபோதிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள்
...யும் இதுவரை எடுக்கப்படவில்லை.

...ரசு தனது கொள்கையிலிருந்து விலகாமல்
...பது தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைக
...நாக்கும் மனப்பாங்கையே காட்டி நிற்கின்றது.
...நாடு என்ற கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதற்கு
...தாக எல்லா இன மக்களையும் சமகண்
...டு பார்க்கும் உயரிய பக்குவம் அரசிடம் இருத்
...ண்டும்.

...ழ்.குடாநாட்டு மக்கள் உணவுப்பொருள்கள்
...ட்ட அனைத்துப் பொருள்களுக்கும் பாடாய்ப்
...கின்றனர்.

பாண் வேண்டுவதற்கு கூட நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருக்கும்பரிதாபம்-கூடவே அரசித் தட்டுப்பாட்டினால் மதிய உணவுக்காக ஏழைகள் பெரும் அல்லல்படுகின்றனர்.

ஏ-9பாதை மூடப்பட்டதற்குப் பின்னர் ஏற்பட்ட தொழிலிழப்பினால், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகிக்கப்படும் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு பணம் இல்லை.

இந்நிலையில் குடாநாட்டு மக்களின் பசி-பட்டினி-பஞ்சத்தைப் போக்க, சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்.

குறிப்பாக யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர் கொண்
...ள்ள பட்டினியை யாழ்ப்பாணத்தில் இயங்கும்சர்வ
... அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளியுலகிற்கு
...ந்துக் கூற வேண்டும். இது அவற்றின் தலையாய
...

...அதேநேரம் சர்வதேச நாடுகள் யாழ்.குடாநாட்டு
...களின் உணவுத் தேவையை நிவர்த்தி செய்ய
...ன்நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இல்லை
...ல் யாழ்.குடாநாட்டின் பட்டினிச் சாவைத் தவிர்ப்
...னமாகவே இருக்கும்.


...வில் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தோல்
...வு பட்டினிச் சாவு என்பதை சர்
...அனர்த்த நிவாரண அடிப்
... உணவுப் பொருள்

...ந்து மக்களின்
...ழத்தம் கொடுப்

# இறுதித் தீர்மானம் எடுக்கும் வழிமுறை ஜெனீவாப் பேச்சின் மூலம் ஏற்பட்டுள்ளது

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)



ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் இறுதித் தீர்மானம் மேற்கொள்ள வழிமுறைகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித்தலைவர் காரியாலயத்தில் நேற்று இந்தியப் பிரமுகர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 28,29 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் பேச்சுக்கள் இடம்பெற்றன. அப் பேச்சுக்களின் போது இணக்கப்பாடுகள் எதனையும் எட்டப்படவில்லை. எனினும் இறுதித்தீர்மானம் மேற்கொள்ளும் வழிமுறைகள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் தீர்வு ஒன்று முன்வைக்கப்படும்.

இதன்போது பேச்சுவார்த்தைநடத்தும் நிலை உருவாகும் என விடுதலைப் புலிகள் குறிப்பிட்டுள்ளமையை ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

# அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை விடுதலைப்புலிகள் முன்வைக்க வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சு மேசையில் அரசியல் தீர்வுக்கான கோரிக்கையையே விடுதலைப்புலிகள் முன்வைக்க வேண்டும். அரசியல் பிரச்சினைதீர்க்கப்பட்டால் யுத்தம் நிரந்தரமாகவே இல்லாது ஒழிந்து விடும் என ஈ.பி.டி.பியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சமாதானத்தை நோக்கி நகர வேண்டும் என்பதே இலங்கைத் தீவின் அனைத்து மக்களினதும் விருப்பங்களாகும். சர்வதேசத்தின் விருப்பமும் இதுவே. அரசாங்கத்தின் விருப்பமும் இதுவே. புலிகள் மீதான நம்பகத்தன்மைகள் எமக்கு இல்லாது இருப்பினும் ஈ.பி.டி.பியின் விருப்பமும் இதுவே.

ஆனாலும் கடந்த காலங்களைப் போல இன்றைய ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் முடிபுகள் எதையும் எட்டிவிடாமல் இடையில் முறித்துவிட புலிகள் முடிபெடுத்து செயற்பட்டிருக்கின்றார்கள்.

அரசாங்கத்தினால் ஏ-9பாதை திறந்துவிடப்பட்டிருந்தது எமது மக்களின்நலன் சார்ந்த நடவடிக்கை என்பதில் மாற்றமில்லை. ஏ-9பாதை திறந்து விடப்பட்டிருந்தபோது கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மக்கள் பயணிக்க முடிந்தது.

உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கான விநியோகப் பாதையாகவும் இதுவே இருந்து வந்தது. யாழ்.குடாநாட்டின் மீது விடுதலைப்புலிகள் வலிந்துகட்டி தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இந்த அசாதாரண சூழலில்தான் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்வதற்காக அரசாங்கத்திற்கு ஏ-9பாதையை மூடிவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. இதில் எமது மக்களின் நலன்கள் பாதிக்கப்பட்டிருப்பது உண்மைதான். மக்களின் நலன்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதற்குக் காரணம் யார்?

இதனால் எமது மக்கள் மனிதாபிமானப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய துயரம் நிகழ்ந்திருக்கிறது. எமது மக்களின் துயரங்களுக்கு விடுதலைப்புலிகள் காரணமாகவிருப்பினும் இதில் எம்மால் பங்கெடுக்காமல் இருந்து விட முடியாது.

இந்நிலையில் ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் ஏ-9பாதையைத் திறந்து விட முடியாவிட்டால் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியாது என நிபந்தனை விதித்திருக்கின்றனர். இது எமது மக்களின் வாழ்வின்மீது மேலும் துயரங்களை சுமத்தவே வழிவகுத்திருக்கின்றது.

ஏ-9பாதை திறக்கப்பட வேண்டுமாயின் அப்பாதையில் அனைவரும் சுதந்திரமாகப் பயணம் செய்ய விடுதலைப்புலிகள் அனுமதிக்க வேண்டும். இதில் யாருடைய நிலைப்பாடு எமது மக்களின் நலன் சார்ந்தது என்பதை சாதாரண குடிமக்கள்தொடக்கம் சர்வதேச சமூகம் வரைக்கும் உணர்ந்து செயலாற்ற வேண்டும் என ஈ.பி.டி.பியினராகிய நாம் வேண்டுகோள் விடுகின்றோம்.

இது ஒருபுறம் இருக்க போக்குவரத்தும் அத்தியாவசிய பொருள்களுக்கான விநியோகமும் மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்தப் பிரச்சினை மட்டுமே. அரசியல்உரிமைப் பிரச்சினையால் மட்டுந்தான் யுத்தம் தொடங்கியது. யுத்தத்தினால் மட்டும்தான் மக்களுக்கான நாளாந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டது.

ஆனால் பேச்சுவார்த்தை மேசையில் புலிகள் முன்வைக்க வேண்டிய கோரிக்கை என்பது அரசியல் தீர்வுக்கான கோரிக்கையாகவிருக்க வேண்டும். அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட்டால் யுத்தம் நிரந்தரமாக இல்லாது ஒழிந்துவிடும். யுத்தம் இல்லை என்றால் இதுபோன்ற மக்களின் நாளாந்த பிரச்சினையும் இயல்பாகவே தீர்ந்துவிடும். (ச)

# பேச்சுவார்த்தை தோல்வியடைய நோர்வேத் தரப்பே காரணம்

## ஜாதிக ஹெலஉறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுவார்த்தை தோல்வியடைய நோர்வேத் தரப்பே காரணமென ஜாதிக ஹெலஉறுமய குற்றஞ்சாட்டியுள்ளது. ஏ-9பாதை திறப்புக் குறித்தே ஜெனீவாவில் பேச்சு நடத்தப்படவுள்ளதாக நோர்வேத் தரப்பினருக்கு தெரிந்திருந்தால் அது தொடர்பாக நோர்வேத் தரப்பு அரசுக்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

அவ்வாறு தெரியப்படுத்தியிருந்தால் அரச தரப்பு தீர்மானம்ஒன்றுடன் சென்றிருக்க முடியும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்தார்.

இப் பேச்சுவார்த்தையின் போது நோர்வேத் தரப்பு தமது கடமையை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை என அவர் குற்றஞ்சுமத்தினார். (ச)

## முன்னாள் ஜனாதிபதி இலங்கை வருகை

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கை வந்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோவின் தெற்காசியப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள அவர் நேற்று லண்டனிலிருந்து இலங்கை வந்தார். இலங்கை வந்த அவர் யுனெஸ்கோ வேலைத்திட்டம் ஒன்றுக்காக அவர் இன்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்கிறார். (ச)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டத்தின் கீழ் கெருடாவில் தெற்கில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் இன்று காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

கெருடாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் க.குலசேகரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆர்.வரதீஸ்வரன் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

முதன்மை விருந்தினராக பிரதித் திட்டப் பணிப்பாளர் க.பாலகிருஷ்ணன், உதவித் திட்டப் பணிப்பாளர் த.ஜெயராஜா ஆகியோர் கலந்து கொள்கின்றனர். ஆசியுரையை ப.பத்மநாதக்குருக்கள் வழங்குவார். (ச)

# இறங்கிய விலைகள் சடுதியாக ஏறின

(யாழ்ப்பாணம்)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற முதல் நாள் குறைக்கப்பட்டிருந்த பொருள்களுக்கான விலைகள் நேற்று சடுதியாக ஏற்றம் கண்டன.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த 28,29 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் பேச்சுக்கள் நடைபெற்றன. இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருள்கள் சந்தைக்கு வந்தன.

அவற்றில் மா 85 ரூபாவுக்கும் சீனி 250 ரூபாவுக்கும் கடந்த 28 ஆம் திகதி விற்கப்பட்டது. இந்நிலையில் ஏ-9பாதை திறக்க அரச தரப்பு மறுப்புத்தெரிவித்ததையடுத்து அப் பொருள்களின் விலை சடுதியாக ஏறின.

மா 150ரூபாவுக்கும் சீனி 450 ரூபாவுக்கும் தற்போது விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அரிசி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சிவதொண்டன் நிலையத்தின் ஊடாக பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம் அறுபது கிலோ எடையுள்ள ஒரு மூடை அரிசியை கற்கோவளம் புனிதநகர் அகதிமுகாமில் உள்ள 70 குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளது.

அந்த முகாமிலுள்ள ஏனைய 126 குடும்பங்களுக்கும் 200 இறாத்தல் பாணை நேற்று முன்தினம் வழங்கியுள்ளதாக மேற்படி சேவாச்சிரமத் தலைவர் சுவாமி ஸ்ரீ சித்ரூபானந்தா தெரிவித்தார். (து-133)

# யாழிற்கு எரிபொருட்கள் கப்பல் மூலம் அனுப்பிவைப்பு

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திற்கான எரிபொருட்கள், கப்பல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார். யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கப்பலில் 540 பீப்பாய் பெற்றோல் மற்றும் 2 ஆயிரம் தொன் டீசல், மண்ணெண்ணெய் என்பன அனுப்பிவைக்கப் பட்டதாக அவர் தெரிவித்தார்.

இவற்றைவிட நாளை ஒரு மாதத்திற்குத் தேவையான எரிபொருட்கள் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எரிபொருட்கள் ஒரு சில தினங்களுக்குள் காங்கேசன்துறை முகத்தைசென்றடையும் எனவும் அவை உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (ச)

# முகவரிகள் அழிந்துள்ள நிலை... தபாலகத்தில் அதிகளவு பொதி...

யாழ்ப்பாணத்திற்கு வெளிமாவட்டங்களில் இருந்து பொதிகளை அனுப்புபவர்கள் முகவரியை தெளிவாகவும் அழியாதவாறும் எழுதுமாறு யாழ்.தபால் திணைக்கள வட்டாரங்கள் கோரியுள்ளன.

முகவரிகளுடன் தொலை பேசி இலக்கங்களையும் குறிப்பிடுமாறும் கோரப்பட்டுள்ளது. தபால் மூலம் பொருட்களை அனுப்பும் போது பயறு மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றை தவிர்க்குமாறு தெரிவிக்கப்பட்டது.

வெளிமாவட்டங்களில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட 2500 இற்கும் மேற்பட்ட 6 ஆயிரம் கிலோவிற்கு மேற்பட்ட... யாழ்.தபால் நிலையத்திற்குக் கி... தாக தெரிவிக்கப்பட்டது.

காலம் க...த நிலையில் ... கிடைத்துள்ளன. இதனால் அ... துள்ளன. இந் நிலையில் ... பட்ட முகவரிகள் அழித்து... திணைக்கள பிர... துள்ளார்.

# அடுத்த சுற்றுப் பேச்சுக்கள்...

பகுதிக்கான மனிதாபிமான விடயங்களைப் பொறுத்த வரை முக்கிய பொருளாக இருந்தது அங்குள்ள மக்களின் பட்டினி பிரச்சினை தான். நாங்கள் ஏற்கனவே கப்பல் மூலம் 20 ஆயிரம் மெ.தொன் பொருட்களை கப்பல் மூலம் அனுப்பிவைத்துள்ளோம். அது போதுமானதாக இல்லாதிருந்தால் நாங்கள் மேலும் அனுப்ப தயாராக உள்ளோம் என்றார்.

கப்பல் மூலம் பொருட்களை அனுப்ப விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பு அவசியம். ஏனெனில் யாழ்ப்பாணப் பகுதிக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச்செல்லும் பாதுகாப்பை அளிக்க விடுதலைப்புலிகள் மறுத்து விட்டார்கள்.

இதனால் பொருட்களைக் கொண்டு செல்லும் முதலாளிகள் அதற்கு மறுக்கிறார்கள். இந்தியாவில் இருந்து நேரடியாக பருத்தித்துறைக்கு பொருட்களைக் கொண்டு செல்ல அரசு எண்ணியிருந்தது.

எனினும் விடுதலைப்புலிகளின் உத்தரவாதம் இல்லாத நிலையில் அந் நடவடிக்கை கைவிடப்பட்டது என்றார்.

சமாதானப் பேச்சுக்கள் ஒரு சிக்கலான நடைமுறை என எங்களுக்குத் தெரியும். ஒரு சில நாட்களில் எல்லாவற்றையும் செய்து விடமுடியாது என தமிழ்ச்செல்வனிடம் கூறினேன். எனினும் முகமாலைச் சோதனைச் சாவடியை திறப்பதற்கான முடிவு இன்றே எடுக்கப்படவேண்டும் எனக்கூறினார்.

ஆனால் நான் இயலாது எனக்கூறிவிட்டேன். கள நிலைமைகள் சீரானால் பாதை திறப்புக்குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் என்றேன். இதேவேளை ஏ-9 பாதை திறப்புக் குறித்த பிரேரணைகள் வந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் அவை தெளிவானவுடன் அநேகமாக அடுத்த சுற்று பேச்சுக்கள் ஜனவரியில் இடம் பெறும் எனவும் அதன் போது விடுதலைப்புலிகளிடம் அவற்றை முன்வைப்போம் என்றார். (ச)

# நடை...

(வயது 17) எ... நடைபாதை வி... சுட்டுக்கொல்...பட்டவராவார்.

சம்பவ இதிற்... களை மேற்... இ.த.விக்ன... தனைக்கா... யில் ஒப்ப... ருக்கு உத...

# நந...

யாழ்... டியில் நின்று வெள்ளைக்கொ... கவிட்டவாறு புறப்பட்டனர். இந் நி... இராணுவத்தினர் சந்தேகத்தின் பேரி... களைத் தாக்க முற்பட்டபோது மீனவ... பிரதிநிதிகளால் இராணுவத்தினருக்கு... மளிக்கப்பட்டதாகவும் அதன் பின் ... வர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை... படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்...

# அத்தியாவசிய சேவைகள்...

சேவையினை வழங் குவதற்கு தேவையான டீசல் இருப்பில் இல்லாத போதும், தனியாரிடமிருந்து பெறப்பட்ட ஆயிரம் லீற்றர் டீசலினைப் பயன்படுத்தி நேற்றைய தினம் பாடசாலை மாணவர்களின் நலன் கருதியும் அரச உத்தியோகஸ்தர்களின் நலன்கருதி யும் நாற்பது பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக யாழ். மத்திய போக்குவரத்துச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.பருத்தித்துறைக்கான சேவைகள் நேற்று இரண்டாவது நாளாகவும் தடைப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இன்று அனைத்துச் சேவைகளும் ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை தனியார் போக்குவரத்துச் சேவைகளும் நேற்று மட்டுப்படுத்தப்பட்டன எரிபொருள் நிரப்பு நிலையங்களும் எரிபொருட்கள் இன்மையால் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மின்சாரம்

டீசல் பற்றாக்குறையின் காரணமாக மின்சாரசபையின் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளும் நேற்று முற்றாக நிறுத்தப்பட்டன. டீசல் கிடைத்தால் மட்டுமே மின்சாரத்தை மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திலேனும் வழங்கு முடியும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. ஒருசில தினங்களுக்கு மின்சாரம் முற்றாக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

### தொலைபேசி

கையிருப்பிலுள்ள சொற்ப அளவு டீசலைப் பயன்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட சில சேவையை வழங்க முடியும் என யாழ்.ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு சில தினங்களுக்குள் டீசல் கிடைக்காத நிலையில் குறிப்பிட்ட தொலை பேசிகளைத் தவிர மற்றையவைக்கான சேவைகள் அனைத்தம் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. டீசல் முடிபடைந்த நிலையில், சில தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து பெறப்பட்டே சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ச-5,133)

# விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு...

தாவது, அரசாங்கம் இனப்பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டு மென்று உயரிய நோக்கத்தில் ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டது.

ஆனால், புலிகள் நிரந்தரத்தீர்வை விடுத்து ஏ-9வீதி திறப்பது தொடர்பான தற்காலிகப் பிரச்சினையை முன்வைத்து பேச்சைக் குழப்பி விட்டனர். இது நியாயமற்ற விடயமாகும். புலிகள் மிகவும் பொறுப்புடன் நடந்துகொண்டிருக்க வேண்டும்.

அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெளிவாகக் குறிப்பிட்டது. ஆனால் புலிகள் ஏ-9 வீதி திறப்பது தொடர்பான விடயத்தைப் பற்றி மட்டுமே பேச முயற்சித்தனர். இவ்வாறான முக்கிய பேச்சுவார்த்தையை தற்காலிக விடயங்களை முன்வைத்து புலிகள் குழப்பியமை தொடர்பாக அரசாங்கம் கவலையடைகின்றது.

புலிகள் இவ்வாறு பொறுப்பற்ற மு... யில் நடந்துகொள்வார்கள் என்று நாங்... எண்ணவில்லை. அடுத்த கட்டப் பேச்சுக்க... திகதியை நிர்ணயம் செய்ய அரசாங்... ரான போதும் புலிகள் அதற்கு ... வில்லை. ஏ-9 வீதியைத் திறந்தால் ... அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை கு... சீலிக்க முடியும் என்று புலிகள் திட்டவ... கூறிவிட்டனர். எனவே புலிகளின் ... கை குறித்து விரைவில் அரசாங்க... வழங்கும் என்பதனை பொறுப்புட... கொள்கின்றேன்.

இனப்பிரச்சினைக்கு பேச்சு... மூலமே தீர்வுகாணவேண்டும் எ... சாங்கம் உறுதியாக இருக்கின்ற... னையும் வலியுறுத்திக்கூறுகின்றார்.

# அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை...

மனிதாபிமான அவலத்தை வெளிப்படுத்தவே ஜெனீவா பேச்சுக்களத்தை பயன்படுத்துவோம் என்று நாம் தெரிவித்திருந்தோம். உலகத்தின் மனிதாபிமான மையமான மனித உரிமைகளின் மையமான ஜெனீவாவின் மையத்தில் நின்று கொண்டு எம்மக்களினது மனிதாபிமான வேண்டுகோளை விடுத்திருக்கிறோம்.

அந்த வகையில் எம் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. ஆனால் எமது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவாவுக்கு நாங்கள் வரும்போது தெட்டத்தெளிவாக எமது கருத்தை முன்வைத்துவிட்டுத்தான் வந்தோம்.

தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய எந்த ஒரு சிறுவிட்டுக்கொடுப்பையும் மேற்கொள்ள அரசாங்கம் ஒத்துழைக்கும் என்று நாம் நம்பவில்லை முழுமையாக சர்வதேச சமூகத்தை நம்பியே அவர்களது அழைப்புக்கு மதிப்பளித்து நாம் வந்தோம் என்று கூறியிருக்கிறோம்.

அரசாங்கம் ஒத்துழைக்கும் என்று சிறு அளவில் கூட நம்பிக்கையில்லாமல் தான் வந்தோம் அது இங்கு நிருபணமாகியிருக்கின்றது.

வலிந்த தாக்குதல்கள் இரு தரப்பும் மேற்கொள்ளாது என்று நோர்வே அனுசரணையாளர்கள் சொல்லியிருந்தனர். ஆனால் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும் போதே-பேச்சுவார்த்தை அரங்கில் இருக்கும் போதே தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வலிந்த தாக்குதல் முயற்சிகளை நாம் எடுத்துக்கூறினோம்.

ஆனால் இதற்கான எந்த ஒரு ஆக்கபூர்வமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. சிறிலங்கா அரசாங்கமானது கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டை பொய்யான காரணங்களைக் கூறி முடக்கிவிட்டு மீண்டும் மீண்டும் எமது மக்கள் மீது இன அழிப்பு யுத்தத்தை கட்டவிழ்த்து விடத்தான் போகிறார்கள்.

இதிலிருந்து எமது மக்கள் விடுதலை பெற -சுதந்திரத்துக்கான போராட்டத்தைத் தொடர எமது தலைவ...ன் வழியில் நின்று போராடுவார்கள்.

புலம்பெயர் வாழ் எம் மக்கள் என்றும் இல்லாத வகையில் முழுமையான ஆதரவை வழங்குவர். ஏனெனில் மனிதாபிமானம் பேசப்படுகிற ஜெனீவாவின் தலைநகரில் நாங்கள் வந்து நின்று கொண்டு எம் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளை முன் வைத்தோம்.

ஆனால் நிராகரிக்கப்பட்டுள்ளதால் எம் மக்களின் மனங்களை புண் படுத்தியுள்ளனர்; அவமானப்படுத்தியுள்ளனர்.

ஆகவே ஒட்டு மொத்த தமிழ்மக்களையும் அணிதிரள வைக்கின்ற ஏற்பாட்டையே இப்போது அரசாங்கம் ஜெனீவாவில் செய்து விட்டுப்போகிறது.

***பிரபாகரனுக்குப் பின்னரான தலைமை***

காலம் காலமாக அரசாங்கத்தால் இன அழிப்பிற்குள்ளாக்கப்பட்ட எம் மக்களினது உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவுமான போராட்டத்தின் தலைவராக -ஒடுக்கப்பட்ட அடக்கு முறைகளுக்குள்ளான தேசிய இனத்தின் தலைவராக -எம் மக்களை வழிநடத்திச் செல்லக்கூடிய சக்தி மிக்க தலைவராக - அனைத்து மக்களாலும் மதிக்கப்படக்கூடிய கௌரவிக்கப்படக்கூடிய தலைவராக தலைவர் பிரபாகரன் தான் எங்கள் தேசிய இனத்தின் தோன்றிய தலைவர்.

அழிந்து போகும் நிலையில் இருந்த மக்கள் அவருடைய காலத்தில்தான் இன்று உலகத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றனர். அவரால்தான் எம் மக்கள் மீண்டும் உயிர்த்தெழுந்து சுதந்திரதிற்காகவும் உரிமைக்காகவும் போராடும் சக்தியைப் பெற்றுள்ளனர்.

ஆகவே, அவரது காலத்தில்தான் நாம் விடுதலை பெறவேண்டும் என்பதுதான் உலகத்தில் வாழுகின்ற அத்தனை தமிழ் மக்களினது வேட்கையாக உள்ளது.

ஆகவே அடுத்த தலைமைகளைப் பற்றி எமது தமிழ்த்தேசிய இனம் சிந்திக்கவேண்டிய தேவையோ அவசியமோ இல்லை.

ஆபிரிக்க மக்களுக்கு ஒரு நெல்சன் மண்டேலா -அமெரிக்க மக்களுக்கு ஜோர்ஜ் வாஷிங்டன் -கியூபா மக்களுக்கு பிடல் ஹாஸ்ரோ -சீன மக்களுக்கு மா-சேதுங் இப்படி பலவேறு நாடுகளின் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு ஒரு தேசியத்தலைமை சுதந்திரத்தை வழிநடத்திச்செல்கிற உறுதி மிக்கத்தலைமைதான் வழிகாட்டி இருக்கிறது.

அதேபோல் தான் எங்கள் தேசத்திற்கும் வழிகாட்ட; வழிநடத்த எங்கள் தேசியத்தலைவர் உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் மக்களையும் தேசத்தையும் நேசிக்கின்ற தலைவராக உள்ளதால் எங்களது மக்கள் அசைக்க முடியாத சக்தியாக இருப்பார்கள் என்றார்.

***அன்ரன் பாலசிங்கம் பங்கேற்காமை ஏன்?***

கலாநிதி அன்ரன்பாலசிங்கம் உடல் நலக் குறைவாக இருப்பதால் பயணிக்கவேண்டாம் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். பயணிக்க முடியாத நிலையில் இருப்பதால் அவர் இப் பேச்சுக்களில் பங்கேற்கவில்லை.

***இந்தியா தொடர்பிலான நிலைப்பாடு***

இந்தியா தொடர்பிலான எமது நிலைப்பாட்டை மிகவும் தெளிவாக எமது தேசியத் தலைவர் அவர்கள் பல வழிகளில் வெளிப்படுத்தி நிற்கிறார்.

இந்தியாவில் வாழ்கின்ற பலகோடி தமிழ் மக்களின் அபிலாசைகளையும் இந்தியா புரிந்திருக்கிறது. பிராந்திய நாடு என்ற வகையில் இந்தியாவும் வன்முறைக்கு முடிபு கட்டி சமாதான வழியில் அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற தனது விருப்பத்தை பல முறை வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்தியாவின் ஏற்பா...ல் நடைமுறையிருத்தல் வடக்கு-கிழக்கு இணைப்பை அரசாங்கம் இப்போது சட்டவிரோத...ருக்கிறது.

இதன் மூலம் அரசியல் வழித்தீர்வு... அனைத்து முயற்சிகளையும் முடக்கிவி... தான் அரசாங்கம் பேச்சுமேசைக்கு ... அரசியல் தீர்வு பற்றி பேசுவோம் எ... சொல்கிறார்களே தவிர அவர்களிடம் ... யல் தீர்வு எதுவும் இல்லை என்பதைத் ... அறிய முற்பட்டும் அறியமுடியாமல் ... விடயம்.

***சி.சு.க.-ஐ.தே.க. ஒப்பந்தம்***

சிறிலங்காவின் ஆளும் சுதந்திரக்க... கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய... யக்கட்சிக்கும் இடையேயான ஒப்பந்தம... ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டா?

தங்களுடைய சுயநலம் நோ... கொண்ட கூட்டா? உண்மையாகவே த... மக்களுக்கு அரசியல் உரிமைகளை விட்... கொடுப்பதற்கும் வழங்குவதற்குமான ச... என்பதை நாம் பொறுத்திருந்துதான் வேண்டும்.

ஆனால் இந்தக் கூட்டை உருவாச்... அதே நேரத்தில் அரசாங்கமானது ... தப்பேரவலத்தை எமது மண்ணில் ... -நிலைமைகளை மோசமாக்கி -யுத்... ஒப்பந்தத்தை சீர்குலைத்து -மனிதா... நெருக்கடிகளை ஏற்படுத்தி-களநில... மிகமோசமான சூழ்நிலையை உரு... முயன்றனர்.

எந்த ஒரு சூழ்நிலையிலும் இது ... சியல்தீர்வை முன்வைப்பதற்கா... இருக்கும் என்று நாம் நம்பவி... கட்டத்தில் ஒரு சாத... தீர்வை தர... யிருக்க... கூட ... களி... ஏ...

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது ...